குழாய்க் கிணறுகளை பராமரித்தல் கட்டணம்	500 0
வீதி ரேகைகள் பரிசீலனை செய்வதற்கான கட்டணம்	600 0
வீதி ரேகைகள் அத்தாட்சிப்பத்திரக் கட்டணம்	100 0
நூல் நிலையத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான கட்டணம்	50 0
நூல் நிலைய அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம்	30 0

12-606/7

கருவலகஸ்வெவ பிரதேச சபை

பதாகைகள் காட்சிப்படுத்தல் - 2015

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் பதாகைகள் காட்சிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மற்றும் துணைச்சட்டங்களினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் சுற்றுநிருபங்களின் ஆலோசனைகளின் படி அட்டவணை 9 இல் காணப்படும் கட்டணங்களை அறவிடுவது பொருத்தம் என 2014, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட சபைக் கூட்டத்தில் இலக்கம் 103/8 இன் படி கீழ் குறிப்பிடப்படும் பிரேரணை சபையினால் நிறைவேற்றப்பட்டது என்று இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

டபிள்யூ. பீ. நீல் வீரசிங்ஹ,
தவிசாளர்,
கருவலகஸ்வெவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கருவலகஸ்வெவ,
2014, நவெம்பர் 11.

தீர்மானம்

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் பதாகைகளை காட்சிப்படுத்துவதற்காக இங்கு அட்டவணை 11 இல் காணப்படும் கட்டணங்களை 2015 ஆம் ஆண்டிற்காக அறவிடுவது பொருத்தம் என கௌரவ சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை 9

நிரல் I	நிரல் II ரூபா ச.
3 மாதங்களுக்கு குறைவாக ஒரு பதாகை அல்லது சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படும் பிரச்சார அறிவித்தல் ஒன்றின் ஒரு அடி வர்க்கத்திற்கு	40 0
3 மாதங்களுக்கு அதிகமாக 6 மாதங்களுக்குக் குறைவாக ஒரு பெனர் அல்லது சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படும் பிரச்சார அறிவித்தல் ஒன்றின் ஒரு அடி வர்க்கத்திற்கு	50 0
6 மாதங்களுக்கு மேலாக ஒரு வருடம் வரை ஒரு பெனர் அல்லது சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படும் பிரச்சார அறிவித்தல் ஒன்றின் ஒரு அடி வர்க்கத்திற்கு	60 0

12-606/ 8

கருவலகஸ்வெவ பிரதேச சபை

பகிரங்க அரங்காட்டல் கட்டளைச் சட்டத்தின் (176 ஆவது அத்தியாயம்) கீழ் கட்டணம் அறவிடல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப (176 ஆவது அத்தியாயம்) பகிரங்க அரங்காட்டல் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கு அட்டவணை 10 இல் குறிப்பிடப்படும் கட்டணங்களை அறவிடுவதற்கு என 2014, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் இலக்கம் 103/ 9 இன் படி, கீழ் குறிப்பிடப்படும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. பீ. நீல் வீரசிங்ஹ,
தவிசாளர்,
கருவலகஸ்வெவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கருவலகஸ்வெவ,
2014, நவெம்பர் 11.

தீர்மானம்

(176 ஆவது அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டல் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கு அட்டவணை 10 இல் குறிப்பிடப்படும் கட்டணங்கள் மற்றும் வரிகளை அறவிடுவது பொருத்தம் என கௌரவ சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை 10

	ரூபா ச.
1. தற்காலிக திரைப்பட காட்சிகள், சர்கஸ் காட்சிகள், நாடகக் காட்சிகள், என்பவற்றுக்காக	
ஒரு நாளைக்கு	500 0
மேலதிக ஒவ்வொரு நாளைக்கும்	100 0
2. சங்கீத நிகழ்ச்சிகளுக்கு ஒரு நாளைக்கு	1,000 0
3. சினிமா கொட்டகைகளுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம்	3,000 0
உல்லாச வரி 10% உம் அறவிடப்படும்	

12-606/ 9

கருவலகஸ்வெவ பிரதேச சபை

வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப (176 ஆவது அத்தியாயம்) பகிரங்க அரங்காட்டல் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக அட்டவணை 11 இல் குறிப்பிடப்படும் கட்டணங்களை அறவிடுவதற்கு 2014, நவெம்பர்

மாதம் 11 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட சபைக் கூட்டத்தில் இலக்கம் 103/9 இன் படி கீழ் குறிப்பிடப்படும் பிரேரணை சபையினால் நிறைவேற்றப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. பீ. நீல் வீரசிங்ஹ,
தவிசாளர்,
கருவலகஸ்வெவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கருவலகஸ்வெவ,
2014, நவெம்பர் 11.

தீர்மானம்

கருவலகஸ்வெவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் சாலியவெவ நகரத்தில் அமைந்துள்ள சந்தகிரி ஹோட்டலுக்கு முன்பாக, மக்கள் வங்கி ஆகிய இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக இங்கு அட்டவணை இலக்கம் 11 இல் காணப்படும் கட்டணங்களை அறவிடுவது பொருத்தம் என கௌரவ சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை 11

	ரூபா ச.
சைக்கிள் ஒன்றிற்கு	5 0
மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு	10 0
முச்சக்கர வண்டி ஒன்றிற்கு	20 0
வேன் வண்டி ஒன்றிற்கு	30 0
பஸ்வண்டி ஒன்றிற்கு	50 0
லொறி வண்டி ஒன்றிற்கு	30 0

மேற்குறித்த கட்டணங்கள் 2 மணித்தியாலங்களுக்கு உரியவையாகும்.

12-606/10

கட்டான பிரதேச சபை

வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபை கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. ல்லானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 147 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துணை ஒழுங்கு விதிகளில் விவரிக்கப்பட்டுள்ள இங்கு கீழே அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயமொன்றுக்காக கட்டான பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதேனும் இடமொன்றைப் பாவிப்பதன் பொருட்டு அனுமதி வழங்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப் பத்திரம் சம்பந்தமாக அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் ஒத்த குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரக் கட்டணமொன்று விதித்து அறவிடப்படவேண்டும் எனவும் 2015 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய வியாபாரம் அல்லது வர்த்தக நிலையத்துக்கு 2015, மார்சு 31 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் உரித்துடைய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றது.

அட்டவணை இல. 01

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
1	குளிர்பான உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும்		250 0	500 0	1,000 0
2	ஐஸ் தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
3	வசிக்கும் வீடொன்று அல்லது தங்குமிடமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
4	பேக்கரி ஒன்று நடாத்துதல்		250 0	350 0	1,000 0
5	சோற்றுக்கடை ஒன்று நடாத்துதல்		150 0	200 0	400 0
6	உணவகம் ஒன்று அல்லது ஹோட்டல் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	1,000 0
7	சீன உணவகம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
8	தேனீர் கடையொன்று நடாத்துதல்		150 0	250 0	500 0
9	பால் பண்ணையொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
10	பால் விற்பனை அல்லது பால் சேகரிக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
11	மீன் அல்லது இறைச்சி கடையொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
12	பாபர் சாப்பு ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
13	மாடு அறுக்கும் மடுவம் ஒன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
14	தனிப்பட்ட சந்தைகள் நடாத்துதல்		250 0	500 0	1,000 0
15	முடி அலங்கார சலூன் ஒன்று நடாத்துதல்		150 0	250 0	500 0
16	தயாரித்த உணவு வழங்கும் நிலையமொன்று நடாத்துதல் (கேட்டரிங் சர்விஸஸ்)		250 0	500 0	1,000 0
	விருப்பம் அற்ற வியாபாரம் :				
1.	உரம், இரசாயன உரம் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல்		100 0	150 0	250 0
2.	100 இற்கு கூடிய 500 இற்கு குறைந்த கோழிப்பண்ணை ஒன்று நடாத்துதல்		200 0	300 0	400 0
3.	500க்கு கூடிய 1500 வரையிலான கோழிப்பண்ணை ஒன்று நடாத்துதல்		250 0	500 0	750 0
4.	1500 இற்கு மேற்பட்ட கோழிப்பண்ணை ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
5.	செம்மறி ஆடுகள், ஆடுகள் அல்லது பன்றிகள் 500 க்கு மேற்பட்ட பண்ணையொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
6.	செம்மறி ஆடுகள், ஆடுகள் அல்லது பன்றிகள் 10 தொடக்கம் 500 வரையிலான பண்ணையொன்று நடாத்துதல்		250 0	350 0	500 0
7.	கரி, விறகு அல்லது சிரட்டை சுடுதல் அல்லது கரி களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
8.	புகையிலை காயவைத்து பதனிடல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	400 0
9.	சவர்க்காரம் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
10.	சிரப் அல்லது பழப்பானவகைகள் தயாரித்தல் அல்லது விற்பனை செய்தல்		250 0	500 0	1,000 0
11.	கள்ளு சேகரிக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல் (அரச அங்கீகாரம் பெற்ற தவறனை)		500 0	750 0	1,000 0
12.	வினாகிரி உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்		200 0	250 0	300 0
13.	அசிட் வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	250 0	500 0
14.	சுண்ணக்கல் களஞ்சியப்படுத்தல் அல்லது சுண்ணாம்பு சூளை ஒன்று நடாத்துதல்		150 0	200 0	300 0
15.	பாணி உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
16	மட்டைக்குழி ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
17	தோற்பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்		200 0	250 0	300 0
18	கை இயந்திரம் மூலம் தோல் பொருட்கள் உற்பத்தி செய்தல்		50 0	100 0	150 0
19	கோப்பி தானிய வகைகள் வாசனைப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
20	நெல்குற்றும் நிலையம் ஒன்று நடாத்துதல்		300 0	500 0	750 0
21	மெழுகுதிரி உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	100 0	200 0
22	எழுதும் மை, அச்சு மை அல்லது ஸ்டென்ஸில் மை உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	250 0	400 0
23	வாசனை பௌடர் வகைகள், உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	750 0
24	டயர் அல்லது ரியுப் வல்கனைஸ் செய்யும் இடம் ஒன்று நடாத்துதல்		250 0	300 0	500 0
25	பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	300 0	500 0
26	விளையாட்டு சாமான்கள் விற்பனை அல்லது உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		150 0	200 0	300 0
27	இறைச்சி அல்லது மீன் குளிர்சாதன அறை ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
28	வெட்டிய தேங்காய் உற்பத்தி செய்தல்		500 0	750 0	1,000 0
29	விலங்குப் பண்ணை ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
30	நூல் அல்லது தும்பு சாயமிடும் நிறுவனம் ஒன்று நடாத்துதல்		150 0	200 0	300 0
31	கோழி இறைச்சிக் கடையொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
32	விலங்குணவு களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
33	சுறா மீன் வால் பதனிடல் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
34	பாதணிகள் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
35	விலங்குணவு உற்பத்தி செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
36	தீன் பண்டங்கள் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
37	படகுகள் மற்றும் வள்ளங்கள் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
38	தொகை விற்பனைக்காக மாவு, உப்பு அல்லது சீனி 15 அந்தருக்கு மேற்பட்ட தொகையொன்று களஞ்சியப்படுத்தல்		150 0	250 0	500 0
39	பாக்கு பதனிடல் அல்லது களஞ்சியப்படுத்தல் நிலையம் நடாத்துதல்		100 0	150 0	250 0
40	உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
41	வாசனைப் பொருள் பொதி செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		100 0	200 0	300 0
42	சட்னி, கடலை, ஜெம் ஆகியன பதனிடப்பட்டு விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		150 0	200 0	300 0
43	குடிநீர் போத்தலில் இட்டு விற்பனை செய்தல்		250 0	500 0	1,000 0
44	உறைந்த தயிர் மற்றும் யோகட் உற்பத்தி நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
45	ஜஸ் பெக்கட் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
46	காலான் உற்பத்தி செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
47	சதொச அல்லது பூட் சிட்டி நிறுவனமொன்று நடாத்துல்		500 0	750 0	1,000 0
48	கருவாடு பொதி பண்ணுதல் மற்றும் விற்பனை நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
	அபாயகரமான வியாபாரம்				
1	50 கலனை விட கூடிய தொகை தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தி வைத்தல்		100 0	250 0	500 0
2	கபொக், சரலைக்கல் அல்லது கருங்கற்கள் உடைக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
3	கொப்பரா உற்பத்தி செய்தல், பதனிடல் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
4	இயந்திரம் மூலம் அல்லது வேறு முறையில் எண்ணெய் (மரக்கறி எண்ணெய்) வடித்து எடுத்தல்		250 0	500 0	1,000 0
5	தீப்பெட்டி உற்பத்தி செய்தல்		250 0	500 0	1,000 0
6	தும்பு அல்லது ஏனைய தும்பு வகைகள் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல்		100 0	250 0	500 0
7	இயந்திரம் மூலம் பலகை வெட்டும் மில் ஒன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
8	கைகளால் பலகை அறுக்கும் மில் ஒன்று அல்லது குழியொன்று நடாத்துதல்		100 0	250 0	500 0
9	இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தும் தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்		150 0	250 0	500 0
10	இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தாத தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்		100 0	200 0	300 0
11	வெற்று போத்தல், வெற்று சாக்கு, பொலித்தீன் பழைய பேப்பர், பிளாத்திக் குவளை, இரும்புத் துண்டுகள் அல்லது பாவித்த உடைகள் மற்றும் புடவைத்துண்டுகள் களஞ்சியப்படுத்தல்		200 0	300 0	500 0
12	கந்தகம் அல்லது கந்தகத் தூள் ஒரு அந்தருக்கு மேற்பட்ட அளவு களஞ்சியப்படுத்தி வைத்தல்		150 0	350 0	500 0
13	ஸ்பிரே நிறப்பூச்சு வேலைத்தளம் ஒன்று நடாத்துதல்		200 0	350 0	500 0
14	இயந்திர மூலம் நூல் நூற்றல்		300 0	500 0	1,000 0
15	இயந்திர மூலம் பிடவை உற்பத்தி (சக்திவள நெசவு நிலையம்)		350 0	500 0	1,000 0
16	சில்க் மற்றும் செயற்கை புடவை நெய்தல் மற்றும் அலங்கரித்தல்		300 0	500 0	1,000 0
17	அச்சகம் ஒன்று நடாத்துதல் (கைகளால்)		100 0	200 0	300 0
18	அச்சகம் ஒன்று நடாத்துதல் (மின்சாரத்தால்)		500 0	750 0	1,000 0
19	இயந்திர மூலம் தேங்காய் எண்ணெய் ஆலையொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
20	செங்கட்டிகள் அல்லது ஓடுகள் களஞ்சியப்படுத்தல்		100 0	200 0	300 0
21	தும்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்		100 0	150 0	250 0
22	தங்க ஆபரணங்கள் உற்பத்தியும் பழுதுபார்ப்பும்		500 0	750 0	1,000 0
23	50 இற்கு மேற்பட்ட தொகையொன்று புதிய அல்லது பழைய டயர் மற்றும் டியுப் களஞ்சியப்படுத்தல்		100 0	200 0	400 0
24	சிரட்டை களஞ்சியப்படுத்தல்		150 0	250 0	500 0
25	தைத்த ஆடைகள் உற்பத்தி, தையல் கடையொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
26	மிருக வைத்திய நிலையம் ஒன்று நடாத்துதல்		150 0	250 0	350 0
27	25 அந்தருக்கு மேற்பட்ட சீமேந்து தொகையொன்று களஞ்சியப்படுத்தல்		100 0	150 0	300 0
28	உள்நாட்டு வெளிநாட்டு பிரம்பு பொருட்கள் செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	200 0
29	கொங்கிரீட் அல்லது மண் குழாய்கள் களஞ்சியப்படுத்தல்		200 0	250 0	500 0
30	தூரிகை வகைகள் உற்பத்தி செய்தல்		150 0	500 0	1,000 0
31	தீந்தை வகைகள் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்றை நடாத்துதல்		250 0	350 0	500 0

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
32	பலகை பதனிடல் அல்லது பலகை பதப்படுத்தல்		500 0	750 0	1,000 0
33	டயர் கட்டை வெட்டுதல் அல்லது மீள நிரப்பும் நிறுவனம் ஒன்று நடாத்துதல்		100 0	200 0	400 0
34	மாணிக்க கல் வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டும் நிலையமொன்று நடாத்துதல்		250 0	500 0	750 0
35	கம்பு மடுவம் அல்லது விறகு மடுவமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
36	பெட்டரி சார்ச் பண்ணுதல் அல்லது பழுதுபார்த்தல்		75 0	100 0	250 0
37	வாகனச் சட்டம் அமைக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	750 0
38	ஜீ. ஐ. வாலிகள் உற்பத்தி செய்தல்		100 0	150 0	300 0
39	பிரேக் லைனிங், கிலச் லைனிங் உற்பத்தி செய்தல்		100 0	250 0	500 0
40	மின்சார பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	250 0	500 0
41	மின்சார கைத்தொழில் நிலையம் ஒன்று அல்லது வானொலி வேலைத்தளம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	300 0
42	இயந்திர மூலம் அல்லாத வேறுவகையில் மெத்தைகள் உற்பத்தி செய்யும் நிலையங்கள் நடாத்துதல்		100 0	150 0	300 0
43	கடைசல் பட்டறையொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
44	துப்புரவேற்பாட்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
45	கொங்கிரீட் கலவை தயாரிக்கும் (ரெடிமிக்ஸ்) நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
46	வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
47	தச்சுத் தொழில் நிலையமொன்று நடாத்துதல்		75 0	100 0	150 0
48	இயந்திர மூலமான தச்சுத் தொழில் நிலையமொன்று நடாத்துதல்		150 0	250 0	500 0
49	சைக்கிள் திருத்தும் நிலையமொன்று நடாத்துதல்		50 0	100 0	200 0
50	மோட்டார் சைக்கில் திருத்தும் நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
51	கயிறு திரிக்கும் தொழிற்சாலையொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
52	பென்ட்ரி கபர்ட் செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
53	தேங்காய் மட்டை வெட்டுதல் மற்றும் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
54	பொலித்தீன், காட்போட், பிடவைத் துண்டுகள் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
	அபாயகரமான விருப்பம் அற்ற வியாபாரம் :				
1	புடவை அச்சிடும் அல்லது சாயமிடும் நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
2	தீ விளையாட்டுப் பொருட்கள் அல்லது பட்டாசு விற்பனை செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
3	வெல்டிங் வேலைத்தளமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
4	மோட்டார் வாகனங்கள் சேவை செய்யும் இடமொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
5	மோட்டார் வாகன வேலைத்தளமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
6	சிற்ப வேலைத்தளம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
7	தகர குவளைகள், உருக்கு பீப்பைகள் அல்லது களஞ்சிய தாங்கிகள் உற்பத்தி செய்தல்		250 0	500 0	750 0
8	குளிர்சாதன இயந்திரங்கள், குளிரூட்டிகள் மற்றும் மீயுயர் குளிரூட்டிகள் சேவைகள் செய்தல் அல்லது பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		150 0	250 0	500 0
9	இறப்பர் ஊட்டப்பட்ட தும்புவகைகள் உற்பத்தி செய்தல்		500 0	750 0	1,000 0
10	இயந்திர மூலம் செங்கல் மற்றும் ஓடுகள் உற்பத்தி செய்தல்		500 0	750 0	1,000 0
11	இயந்திரமூலம் அல்லாத வேறுவகையில் செங்கல் மற்றும் ஓடுகள் உற்பத்தி செய்தல்		250 0	350 0	500 0
12	சீமேந்து புலொக் கல் உற்பத்தி செய்தல்		250 0	500 0	1,000 0
13	ஒட்டுப்போடுதல் மற்றும் அமில மூலம் ஒட்டுப்போடும் நிலையமொன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
14	கற்சிலை நிர்மாணிக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	250 0
15	முச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள் சேவை நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
16	டை கிளினிக் வேலை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
17	சீமெந்து பொருட்கள் அல்லது எஸ்பெஸ்டஸ் உற்பத்தி செய்தல்		250 0	500 0	1,000 0
18	வெளியேற்றும் பிளாஸ்ரிக், மெழுகுக் கடதாசி மீள்சுழற்சி செய்யும் நிலையமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0

12-557/1

கட்டான பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபை கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் 150 (1) ஆம் உப பிரிவினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், கட்டான பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதேனும் இடம் ஒன்றில் நடாத்தப்பட்டு வரும் இங்கு கீழே அட்டவணையில்

முதலாம் நிரலில் கூறப்பட்டுள்ள சகல கைத்தொழில் சம்பந்தமாகவும் அந்த அட்டவணையின் II ஆம் நிரலில் கூறப்பட்டுள்ள குறிப்பில் தரப்பட்ட அளவு வரி ஒன்று 2015 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடப்பட வேண்டும் எனவும் 2015, மார்ச்சு 31 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உரித்துடைய நபர்களினால் செலுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

நிரல் I		நிரல் II		
		இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாத ரூபா ச.	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை ரூபா ச.	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய ரூபா ச.
1	வாகனங்கள் வாசனையூட்டும் நிலையம் ஒன்று நடாத்துதல்	250 0	500 0	1,000 0
2	பாடல்களை நாடாவில் பதிவு செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்	200 0	300 0	500 0
3	மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	250 0	350 0	500 0
4	சப்பாத்து விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	200 0	300 0	500 0
5	மின்சார உபகரணங்கள் வாடகைக்கு வழங்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்	100 0	150 0	250 0
6	டயர் அல்லது டியுப் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	250 0	350 0	500 0
7	மரண தேவைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	500 0	750 0	1,000 0
8	உடனடி புகைப்படம் பிரதி பண்ணும் நிலையம் ஒன்று நடாத்துதல்	200 0	300 0	500 0
9	குளிர்பானம் தொகையாக விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்	500 0	750 0	1,000 0
10	கைக்கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்	100 0	150 0	250 0
11	லொத்தர் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	100 0	150 0	250 0
12	சாப்புச் சாமான்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	100 0	150 0	250 0
13	தனியார் மருத்துவ பரிசோதனை நிலையம் ஒன்று நடாத்துதல்	500 0	750 0	1,000 0
14	புடவை விற்பனை செய்யும் கடை ஒன்று அல்லது நிலையம் ஒன்று நடாத்துதல்	250 0	500 0	1,000 0
15	வெளிநாட்டு மதுபானம் மற்றும் உள்நாட்டு மதுபானம் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல் (அரசாங்க அனுமதி பெற்ற)	500 0	750 0	1,000 0
16	படங்கள் சட்டகமிடும் நிலையம் ஒன்று நடாத்துதல்	150 0	250 0	500 0
17	இறப்பர் சீல் தயாரித்தல் மற்றும் பிளாத்திக் பெயர் பலகைகள் தயாரிக்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்	200 0	300 0	600 0
18	விற்பனைக்காக தையல் மெசின் அல்லது குளிரூட்டிகள் களஞ்சியப்படுத்தி வைத்தல்	200 0	300 0	500 0
19	விற்பனைக்காக சைக்கில் அல்லது மோட்டார் சைக்கில்கள் களஞ்சியப்படுத்தி வைத்தல்	250 0	500 0	1,000 0
20	மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்தல்	500 0	750 0	1,000 0
21	தொலைக்காட்சி, குளிரூட்டி சைக்கில்கள் மின்விசரிகள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	250 0	500 0	1,000 0
22	அலங்காரப் பொருட்கள் கைப்பணிப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்	150 0	250 0	500 0
23	பலகை பீரலு வெட்டும் நிலையம் ஒன்று நடாத்துதல்	100 0	200 0	300 0
24	குரோசரி ஒன்று நடாத்துதல்	200 0	300 0	500 0
25	விற்பனைக்காக புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்	200 0	300 0	500 0

தொடர் இல.	அதிகாரம் வழங்கப்படும் தொழில் முயற்சியின் தன்மை	நிரல் I	நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
			வருடாந்தப் பெறுமதி ரூ. 750 க்குக் கூடாது	வருடாந்தப் பெறுமதி ரூ. 750 தொடக்கம் ரூ. 1,500 வரை	வருடாந்தப் பெறுமதி ரூ. 1,500 க்குக் கூடிய
			ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
26	மூக்குக்கண்ணாடி சட்டகம் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
27	டெலெக்ஸ், தொலைபேசி சேவை அல்லது முகவர் தபால் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	750 0
28	ஆங்கில மருந்துகள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
29	பூச்செடிகள் விற்பனை அல்லது நாற்றுமேடைகள் நடாத்துதல்		100 0	150 0	250 0
30	கைக்கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	250 0
31	வீடியோ நாடாக்கள் வாடகைக்கு வழங்கும் அல்லது விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்		150 0	200 0	300 0
32	பீங்கான் பொருட்கள் கண்ணாடிப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	250 0
33	கட்டிட பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
34	மணல் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
35	மண் அல்லது சரளைக்கல் வெட்டும் நிலையம் ஒன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
36	1 அந்தருக்கு கூடிய தேயிலைத்தூள் களஞ்சியப்படுத்தல் (அரச அங்கீகாரம் பெற்ற)		150 0	200 0	350 0
37	உடற்பயிற்சி பயிற்றுவிப்பு நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	350 0	500 0
38	பெனர், பதாகைகள் வரையும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	200 0
39	கையடக்க தொலைபேசி விற்பனை மற்றும் பழுதுபார்ப்பு நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
40	கணினி பழுதுபார்ப்பு நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	350 0	500 0
41	மரமுந்திரி பொதி செய்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
42	விவசாய இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல்		250 0	500 0	1,000 0
43	பீடி உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		100 0	150 0	250 0
44	குசன் செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
45	தங்க ஆபரணங்கள் மெருகூட்டும் அல்லது முலாமிடும் நிலையம் ஒன்று நடாத்துதல்		200 0	300 0	500 0
46	பெகோ இயந்திரம், டிரக்டர் மின்சார உபகரண இயந்திரங்கள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
47	மின் குமிழ்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
48	உருவ அலங்காரம், மணமகள் அலங்காரம் செய்யும் நிலையம் ஒன்று நடாத்துதல் (பியுடி சென்டர்)		200 0	300 0	500 0
49	தொலைபேசி வசதி வழங்கும் கொட்டகை ஒன்று நடாத்துதல்		200 0	300 0	400 0
50	மோட்டார் வாகனம் வியாபாரம் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
51	தனியார் மருந்தகம்		500 0	750 0	1,000 0
52	வாகனங்களின் புகை பரிசோதனை நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
53	கம்பு மடுவமொன்று நடாத்துதல்		300 0	500 0	1,000 0
54	விறகு மடுவம் அல்லது களஞ்சியமொன்று நடாத்துதல்		50 0	100 0	150 0
55	புகைப்படக் கூடமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0
56	பெற்றோல், டீசல் அல்லது எண்ணெய் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்துதல்		250 0	500 0	1,000 0
57	தென்னங் கம்பு கிழிக்கும் நிலையமொன்று நடாத்துதல்		250 0	350 0	500 0
58	அலங்கார மீன்கள் வளர்த்தல் மற்றும் விற்பனை செய்தல்		500 0	750 0	1,000 0
59	சங்கீத உபகரணங்கள் வாடகைக்கு விடும் நிலையமொன்று நடாத்துதல்		500 0	750 0	1,000 0

கட்டான பிரதேச சபை

வியாபார வரி விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) உப பிரிவினால் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்பட்ட துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளல் அல்லது அந்தச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வரியொன்று செலுத்துதல் அவசியமில்லாத இங்கு கீழே 2 ஆம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள வியாபாரம் அல்லது வேறு ஏதேனும் தொழில் முயற்சி ஒன்று கட்டான பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்படும் சகல நபர்களிடமிருந்தும் அந்த வியாபாரத்தின் 2014 ஆம் ஆண்டின் வருமானம் இங்கு இலக்கம் 1 அட்டவணையில் முதலாம் நிரலில் காண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயமொன்றின் எல்லைகள் உட்பட்டதாக நிலவும் சந்தர்ப்பத்தில் இங்கு இரண்டாம் நிரலில் காண்பிக்கப்பட்டுள்ள குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ள அளவின் பிரகாரம் உள்ள வியாபார வரியொன்று 2015 ஆண்டில் விதித்து அறவிடப்பட வேண்டும் எனவும் அந்த வரி 2015, மார்சு 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரித்துடைய நபர்களினால் பிரதேச சபைக்கு செலுத்தப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கின்றது.

அட்டவணை - 1

இந்த வரி செலுத்தப்படவேண்டிய வருடத்திற்கு முன்னரான வருடத்தின் பெறுகைகளுக்கு அமைவாக கீழே காண்பிக்கப்படும் தொகைகள் விஞ்சாத வகையில் ஆகும்.

நிரல் I வியாபாரத்தின் கடந்த வருட வருமானம்	நிரல் II செலுத்தவேண்டிய வருடாந்த வரி ரூபா ச.
1. ரூபா 6,000 ஐ விஞ்சாத விடத்து	இல்லை
2. ரூபா 6,000 ஐ விஞ்சும் எனினும் ரூபா 12,000 ஐ விஞ்சாத விடத்து	90 0
3. ரூபா 12,000 ஐ விஞ்சும் எனினும் ரூபா 18,750 ஐ விஞ்சாத விடத்து	180 0
4. ரூபா 18,750 ஐ விஞ்சும் எனினும் ரூபா 75,000 ஐ விஞ்சாத விடத்து	360 0
5. ரூபா 75,000 ஐ விஞ்சும் எனினும் ரூபா 1,50,000 ஐ விஞ்சாத விடத்து	1,200 0
6. ரூபா 1,50,000 ஐ விஞ்சும் விடத்து	3,000 0

அட்டவணை - 2

மேற்கூறப்பட்ட வரிக் கட்டணம் உரித்தாகும் வியாபரம் :

1. தரகுக்கூலி முகவர்கள் நிலையம் ஒன்று நடாத்துதல்.
2. ஏலதாரர்களின் நிறுவனமொன்று நடாத்துதல்.
3. தரகர்கள் நிலையமொன்று நடாத்துதல்.
4. பணம் கடனாக வழங்கும் நிலையமொன்று நடாத்துதல்.
5. பண முதலீட்டாளர் நிலையமொன்று நடாத்துதல்.
6. ஒப்பந்தக் கம்பனி/நிலையமொன்று நடாத்துதல்.
7. அடகு பொருட்கள் எடுக்கும் நிலையமொன்று நடாத்துதல்.

8. கணக்கு பரிசோதகர்கள் நிலையமொன்று நடாத்துதல்.
9. வீட்டு நிர்மாண கலைஞர்களின் நிலையமொன்று நடாத்துதல்.
10. திட்டமிடுவோரின் நிலையமொன்று நடாத்துதல்.
11. காப்புறுதி முகவர்களின் நிலையமொன்று நடாத்துதல்.
12. போக்குவரத்து முகவர்களின் நிலையமொன்று நடாத்துதல்.
13. வாடகைக்கார் உரிமையாளர்களின் நிலையமொன்று நடாத்துதல்.
14. சாரதி பயிற்சி பாடசாலைக்கான நிலையமொன்று நடாத்துதல்.
15. லொத்தர் டிக்கட் முகவர்களின் நிலையமொன்று நடாத்துதல்.
16. சுற்றுலா பஸ்வண்டிகள் அல்லது வியாபாரமொன்று நடாத்துதல்.
17. லொறி உரிமையாளர் நிறுவனமொன்று நடாத்துதல்.
18. தனியார் மருத்துவ நிலையமொன்று நடாத்துதல்.
19. உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வங்கி நிறுவனம் ஒன்று நடாத்துதல்.
20. சொத்துக்கள் விற்பனை கம்பனியொன்று நடாத்துதல்.
21. பந்தயம் சூதாட்டத்திற்கான நிலையம் ஒன்று நடாத்துதல்.
22. மருத்துவ பரிசோதனை நிலையம் ஒன்று நடாத்துதல்.
23. ஆடைத் தொழிற்சாலை ஒன்று நடாத்துதல்.
24. உள்நாட்டுப் பொருட்கள் ஏற்றுமதிக்கான கம்பனியொன்று அல்லது நிறுவனம் ஒன்று நடாத்துதல்.
25. இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன தரிப்பிடமொன்று நடாத்துதல்.
26. வாகனங்களுக்கான வாயு விநியோகிக்கும் நிலையமொன்று நடாத்துதல்.
27. தொலைபேசிச் சேவைகள் வழங்குவதற்கான சமிக்ஞை கோபுரம் ஒன்று/நிலையம் ஒன்று நடாத்துதல்.
28. வெளிநாட்டுச் சேவை வேலைவாய்ப்பு வழங்கும் முகவர் நிலையம் ஒன்று நடாத்துதல்.
29. கூட்டுறவு மருத்துவசாலை ஒன்று.
30. சமையல், பத்திக் பாடசாலை.
31. தனியார் தரவுகள் தொழில்நுட்பவியலாளர்.
32. ஆலோசனை சேவை நிறுவனம்.
33. தனியார் உபசரணை நிலையம்.
34. தாதிகள் பயிற்சி நிலையம்.
35. விடுமுறை/களியாட்டநிறுவனம்.
36. கல்வி நிறுவனம்/பாடசாலை.
37. நிறுவனங்கள் சுத்திகரிப்புச் சேவை நிலையமொன்று நடாத்துதல்.

12- 557/3

கட்டான பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) உப பிரிவினால கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், கட்டான பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள சகல

வீடுகளில், கட்டிடங்களில், காணிகளில், வாடகைக்கு விடும் வீடுகளில் 2014 ஆம் ஆண்டில் அமுலிலிருந்த வருடாந்தப் பெறுமதிகளின் மதிப்பீடுகளே 2015 ஆம் ஆண்டிற்காகவும் ஏற்றுக்கொள்வதற்கும்,

அந்த மதிப்பீடுகளின்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கூறப்பட்ட சொத்துக்களின் மீது மேற்கூறப்பட்ட வருடாந்த பெறுமதியில் கட்டான பிரதேச சபையின் எல்லைக்குள் ரத்தொழுவ வீடமைப்பு திட்டத்திற்கு அப்பால் அமைந்துள்ள சகல அசையாச் சொத்துக்களினதும் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் 6% மான வருடாந்த வரிப்பணமும், ரத்தொழுகம வீடமைப்புத் திட்டத்தினுள் அமைந்துள்ள சகல அசையாச் சொத்துக்களினதும் மேற்கூறப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் 10% வருடாந்த மதிப்பீட்டு வரியொன்று, 2015 ஆம் ஆண்டில் விதித்து அறவிடப்பட வேண்டும் எனவும் கட்டான பிரதேச சபைக்கு மதிப்பீட்டு வரி செலுத்த வேண்டியுள்ள சகல நபர்களினாலும் மேற்கூறப்பட்ட மதிப்பீட்டு வரி 2015 ஆம் ஆண்டின் மார்சு 31, யூன் மாதம் 31, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதி ஆகிய திகதிகளில் முடிவடையும் நான்கு காலாண்டுகளில் சமமான நான்கு தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடுவதற்கும் பிரேரிக்கின்றேன்.

(1) 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்படவேண்டிய வரிப்பணம் 2015, சனவரி 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுமாயின் 10% மான கழிவொன்றும், மதிப்பீட்டு வரி காலாண்டு ரீதியாக செலுத்தப்படுவதாயின் குறித்த காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தப்படுமாயின் 5% மான கழிவொன்றும், வழங்கப்படும் என பிரதேச சபை சட்டத்தின் 134 (7) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.

12-557/4

கட்டான பிரதேச சபை

காணிகள் விற்பனை மீதான வரி - 2015

கட்டான பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியொன்று ஏலவிற்பனையாளரினால் அல்லது தரகர்களினால் அல்லது அவரின் ஊழியரினால் அல்லது துணை பிரதிநிதி ஒருவரினால் பிரசித்த ஏல விற்பனையில் அல்லது வேறு விதமாக விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பம் ஒன்றில். அந்த காணி விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்தொகையின் நூற்றுக்கு ஒன்றுக்கு (1%) சமமான வரியொன்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 (1) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது ஊழியர் அல்லது பிரதிநிதியினால் 2015 ஆம் ஆண்டில் இந்த சபைக்கு செலுத்தப்படவேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த வரி உரித்துடைய காணி விற்பனை செய்யப்பட்ட உடனே செலுத்தப்படவேண்டும்.

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

12-557/5

கட்டான பிரதேச சபை

வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீது வரி விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 148 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கட்டான பிரதேச சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆம் பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டில் கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் காண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு தம்மிடம் சொந்தமாக வைத்துக் கொண்டுள்ள எல்லா நபர்களிடமிருந்து அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் காண்பிக்கப்பட்டுள்ள வரியொன்று 2015 ஆம் ஆண்டிற்கு அறவிடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்படுவதுடன், 148 (3) ஆம் பிரிவுக்கு அமைவாக இந்த வரிப்பணம் செலுத்தப்படவேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

நிரல் I	நிரல் II ரூபா ச.
மோட்டார் வாகனமொன்று, மோட்டார் டிரை கார் ஒன்று, மோட்டார் லொறியொன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, கரத்தையொன்று, ஜின் ரிக்ஷோ ஒன்று, சைக்கில் ஒன்று அல்லது டிரைஸிகல் ஒன்று அல்லாத சகல வாகனங்களுக்கும்	25 0
ஒவ்வொரு சைக்கில் அல்லது டிரைசிகல் அல்லது சைக்கில் கார் ஒன்று அல்லது கரத்தை ஒன்றுக்காக-	
(அ) வியாபார நடவடிக்கைகளுக்கு பாவிப்பதாயின்	18 0
(ஆ) வியாபார நடவடிக்கைகளுக்கு அல்லாத விடயமொன்றுக்காக பாவிப்பதாயின்	4 0
ஒவ்வொரு கரத்தைக்கும்	20 0
ஒவ்வொரு கைக்கரத்தைக்கும்	10 0
ஒவ்வொரு ரிக்ஷோவுக்கும்	7 50
ஒவ்வொரு குதிரையொன்று, போனியொன்று, கழுதையொன்றுக்கு	15 0
ஒவ்வொரு யானைக்கும்	50 0

12-557/6

கட்டான பிரதேச சபை

விளம்பர அறிவித்தல் மற்றும் கட்புல சுற்றாடல் பற்றிய கட்டணம் விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட கட்டான பிரதேச சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. ஸ்ரீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை அலுவலகம்,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) மற்றும் 146 (1) ஆம் உப பிரிவின் கீழ் கட்டான பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 1988.08.23 ஆந் திகதிய இலக்கம் 520/7 கொண்ட அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்புகள் கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியின் 39 ஆம் பிரிவில் விளம்பரம்/கட்புல சுற்றாடல் பற்றிய இடைக்கால ஒழுங்குவிதித் தொடரின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டான பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் வீதி ஒன்றுக்கு, பாதையொன்றுக்கு, கால்வாயொன்றுக்கு, மாவத்தையொன்றுக்கு கடலொன்றுக்கு அல்லது ஆகாயத்துக்கு காணும் விதத்தில் அறிவித்தல்கள் காட்சிக்கு வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் சம்பந்தமாக கீழ்க்காணும் விதத்தில் அனுமதிப்பத்திர கட்டணம் 2015 ஆம் ஆண்டுக்கு அறவிடுதல் வேண்டுமென கட்டான பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

நிரல் I	நிரல் II	நிரல் II ரூபா ச.
நிரந்தர விளம்பர அறிவித்தலொன்று 01 வருட காலப்பகுதிக்கு	ச. அடி 01 க்கு அல்லது அதன் பகுதிக்கு	ரூபா 75 வீதம்
6 மாதகாலத்துக்கு மட்டும் பெனர் ஒன்றாக காட்சிக்கு வைக்கப்பட்ட தற்காலிக விளம்பர அறிவித்தலொன்றுக்கு	ச. அடி 01 க்கு அல்லது அதன் பகுதிக்கு	ரூபா 25 வீதம்

12 - 557/7

கட்டான பிரதேச சபை

சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்ட ஹோட்டலொன்று, உண்டிச்சாலையொன்று அல்லது வதிவிடமொன்றுக்காக கட்டணம் அறவிடல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 147 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட கட்டான பிரதேச சபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. லீலானந்த சில்வா,
தவிசாளர்,
கட்டான பிரதேச சபை.

கட்டான பிரதேச சபை,
தெமங்ஹந்திய,
2014, நவெம்பர் 10.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 147 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் விடயங்களுக்காக ஏதேனும் ஹோட்டலொன்று, உண்டிச்சாலையொன்று அல்லது வதிவிடமொன்று இலங்கைச் சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அந்த ஹோட்டலொன்று, உண்டிச்சாலையொன்று அல்லது வதிவிடமொன்றின் கடந்த ஆண்டின் வருடாந்த வருமானத்தின் 1% ஐ விஞ்சாத கட்டணமொன்று இச்சபைக்கு 2015 ஆம் ஆண்டிலும் செலுத்தப்படவேண்டும் என வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடுதல் வேண்டுமென தீர்மானிக்கின்றது.

12-557/8

ருவன்வெல்ல பிரதேச சபை

மதிப்பீட்டு வரி அறவிடல் - 2015

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் ஒ-8-I இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்படுகின்ற குறித்த மதிப்பீட்டு வரியினை ஒவ்வொரு காலாண்டினுள்ளும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பீட்டு வரி 2015, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டால் அந்த மொத்த மதிப்பீட்டு வரியில் பத்து வீதம் (10%) கழிவும் ஒவ்வொரு காலாண்டிற்குமான மதிப்பீட்டு வரி குறித்த ஒவ்வொரு காலாண்டினதும் முதல் மாதத்தின் கடைசித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டால் ஐந்து வீதம் (5%) கழிவும் வழங்கப்படும்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2014, செத்தெம்பர் 25.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் -

(அ) 146 ஆம் உப பிரிவின் 1 ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றப்பட்ட பிரதேசம்/பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேசம்/பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களின் 2014 இல் காணப்பட்ட வருடாந்தப் பெறுமதியினை 2015 ஆம் ஆண்டின் வருடாந்தப் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையை முன்னேற்றப்பட்ட பிரதேசம்/ பிரதேசங்களாக ருவன்வெல்ல நகர அதிகார எல்லைப் பிரதேசத்தில் இலக்கம் 01 முதல் இலக்கம் 07 வரை உள்ள பிரதேசங்களில் அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் ஏழு வீத (7%) மதிப்பீட்டு வரியினையும், கலபிடமட, கோனகல்தெனிய, அமிதிரகல, கன்னத்தோட்டை போன்ற முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் நான்கு வீத (4%) மதிப்பீட்டு வரியினையும் ;

(இ) 134 ஆம் பிரிவின் 6 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப மேலே கூறப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு வரியினை 2015 மார்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆம் திகதிகளில் முடிவுருகின்ற 4 காலாண்டினுள்ளும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிடுவதற்கு ருவன்வெல்ல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

12-575/1

ருவன்வெல்ல பிரதேச சபை

ஏக்கர் வரி விதித்தல் - 2015

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் ஒ-8-II இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏக்கர் வரி 2015, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டால் அந்த மொத்த ஏக்கர் வரியில் பத்து வீதம் (10%) கழிவும் ஒவ்வொரு காலாண்டிற்குமான ஏக்கர் வரியினை குறித்த ஒவ்வொரு காலாண்டினதும் முதல் மாதத்தின் கடைசித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டால் ஐந்து வீதம் (5%) கழிவும் கொடுக்கப்படும்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2014, செத்தெம்பர் மாதம் 25.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் -

(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள ஏக்கர் வரிக்கு உட்படுகின்ற அனைத்து காணியினதும் 2014 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட வரியை 2015 ஆம் ஆண்டிலும் ஏற்றுக்கொள்வதற்கும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப குறித்த உப பிரிவின் முதலாம் துணைக் கட்டளையின் கீழ் 1989.03.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் ஏக்கர் வரியினை விதித்தல் மற்றும் அறவிடுதல் விடயமாக உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் விஷேட பிரதேசமொன்றாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஹெக்டயாருக்குக் குறையாத இருந்தும் ஐந்து ஹெக்டயாருக்குக் குறைந்த அனைத்து காணியின் மீதும் ரூபா ஐம்பது (50.00) அளவிற்கேற்றவாரான ஏக்கர் வரியினை மற்றும் 05 ஹெக்டயார்கள் அதற்கு மேற்பட்ட அனைத்து காணிகளினதும் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் ரூபா பத்து (10.00) வீதமான ஏக்கர் வரியினை 2015 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடுவதற்கும் ; மற்றும்

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப மேற்குறித்த வரியினை 2015 ஆம் வருடத்தில் மார்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவுறுகின்ற நான்கு காலாண்டுகளினுள் சமமான நான்கு (04) தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்தும்படி வரிக்கு உட்படுகின்ற ஒரு நபருக்கு கட்டளையிடுவதற்கும் ருவன்வெல்ல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

12-575/2

ருவன்வெல்ல பிரதேச சபை

வாகனங்கள் மற்றும் விலங்குகளுக்கு வரி விதித்தல் - 2015

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2014, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் ஒ-8-III இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

இதன்படி ருவன்வெல்லபிரதேச சபை அதிகார எல்லைக்குள் இவ்வரிக்கு உட்படுகின்ற எவையேனும் ஒரு வாகனம் அல்லது பிராணியொன்றினை வைத்துக்கொள்ளும் அனைத்து நபர்களினாலும், குறித்த வாகனம் அல்லது பிராணியினை தமது பொறுப்பில் வைத்திருக்கின்ற நாட்களின் எண்ணிக்கை 30 நாட்கள் பூரணமானதும் 2015 ஆம் ஆண்டிற்கான இவ் வரியினை ருவன்வெல்ல பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கின்றேன்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2014, செத்தெம்பர் 25.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆம் பிரிவு மற்றும் நான்காம் அட்டவணையின் ஏற்பாடுகளின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2014 ஆம் ஆண்டில் கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் வாகனம் அல்லது மிருகத்தினை தமது பொறுப்பில் வைத்துக்கொள்ளும் அனைவர் மீதும் அதன் II ஆம் நிரலில் நேரான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரியொன்றினை 2015 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றது.

அட்டவணை (148 ஆம் பிரிவு)

I ஆம் நிரல்	II ஆம் நிரல் கட்டணம் ரூபா ச.
ஒரு மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் ட்ரைகார், ஒரு மோட்டார் லொறி, ஒரு மோட்டார் சைக்கில், ஒரு வண்டில், ஒரு ரிக்ஷோ, ஒரு துவிச்சக்கர வண்டி அல்லது ஒரு ட்ரைசிகல் அல்லாத அனைத்து வாகனங்களிற்காகவும்	25 0
ஒவ்வொரு துவிச்சக்கரவண்டிகள் அல்லது ட்ரைசிகல் அல்லது பைசிகல் கார் அல்லது வண்டில்களிற்காக	
(அ) வியாபார நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுவதாயின்	18 0
(ஆ) வியாபார நடவடிக்கைகள் அல்லாத விடயங்களிற்காக உபயோகிக்கப்படுவதாயின்	4 0
ஒவ்வொரு வண்டில்களிற்காக	20 0
ஒவ்வொரு கை வண்டில்களிற்காக	10 0
ஒவ்வொரு ரிக்ஷோவிற்காக	7 50
ஒவ்வொரு குதிரை, போனி அல்லது கழுதை	15 0
ஒவ்வொரு யானைகளிற்காக	50 0

விட்டம் 26 அங்குலங்களை விடக் கூடாத சில்லுகளையுடைய குழந்தை வாகனங்கள், வீல்பரோ தனியார் இடங்களில் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துகின்ற கை வண்டில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாத கை வண்டில்கள் இவ்வரியிலிருந்து விளக்களிக்கப்படும்.

குவன்வெல்ல பிரதேச சபை

கைத்தொழில் அனுமதிப்பத்திரக் கட்டணம் - 2015

குவன்வெல்ல பிரதேச சபையினால் 2014, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் ஒ-8-IV இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட குறித்த வியாபார வரியினை அந்த வருடத்தில் ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கின்றேன்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
குவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குவன்வெல்ல,
2014, செத்தெம்பர் 25.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, குவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள், கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் கைத்தொழிலொன்றை 2015 ஆம் வருடத்தில் நடாத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் மேல் குறித்த கைத்தொழிலை நடாத்துகின்ற வளவின் வருடாந்தப் பெறுமதி II ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் எல்லைகளிற்கு உட்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கு நேரான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிற்கேற்றவாரான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடவேண்டுமென குவன்வெல்ல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை I

தொடர் இலக்கம்	*I ஆம் நிரல்* *கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை*	*II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி*		
		ரூபா 750 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்	*ரூபா 750 விட அதிகமாக இருந்தும் ரூபா 1,500 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்*	*ரூபா 1,500 விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
	அபாயகரமான வியாபாரம்			
1	குளிரூட்டல் இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி, அதிகுளிர் சாதனப் பெட்டி சேவைகள் மற்றும் திருத்தம் செய்யும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
2	மின் கலங்களை மீள் நிரப்பும் நிலையம்	500 0	750 0	1,000 0
3	புடவைகள் நிறச்சாயமிடுதல்	500 0	750 0	1,000 0
4	நகைகள் உற்பத்தி	500 0	750 0	1,000 0
5	கடிகாரங்களைத் திருத்தம் செய்தல்	500 0	750 0	1,000 0
6	வானொலிப்பெட்டி/தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் மின் உபகரணங்கள் திருத்தம்	500 0	750 0	1,000 0
7	மட்பாண்டங்கள் உற்பத்தி செய்தல்	500 0	750 0	1,000 0
8	படங்கள் சட்டமிடும் இடமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
9	உணவுவகைகள் மற்றும் உணவுகள் சம்பந்தமாக நடமாடும் வியாபாரமொன்றினை நடத்துதல்	500 0	750 0	1,000 0
10	வெடிப்பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
11	எரிவாயு விற்பனை செய்யும் வியாபாரமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0

அட்டவணை - 11

தொடர் இலக்கம்	I ஆம் நிரல் கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை	II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி		
		ரூபா 750 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்	ரூபா 750 விட அதிகமாக இருந்தும் ரூபா 1,500 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்	ரூபா 1,500 விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில்
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
	அபாயகரமான மற்றும் அழகற்ற வியாபாரங்கள்			
1	சீமெந்து சார்ந்த உற்பத்திகள்	500 0	750 0	1,000 0
2	இயந்திரங்கள் மூலம் தச்சன் கம்மாலையொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
3	இயந்திரங்கள் மூலம் மர ஆலையொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
4	அரைக்கும் ஆலையொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
5	மோட்டார் வாகனம் திருத்தும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
6	துவிச்சக்கரவண்டி/மோட்டார் சைக்கில்/முச்சக்கர வண்டி திருத்தம் செய்தல்	500 0	750 0	1,000 0
7	வாகனங்களை வொல்கனைஸ் பண்ணும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
8	மோட்டார் சைக்கில்/முச்சக்கர வண்டி சேவை நிலையமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
9	குடைசல் நிலையமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
10	குடைசல்/ஒட்டு வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
11	ஆடை தைக்கும் இடமொன்றை நடாத்ததல்	500 0	750 0	1,000 0
12	ஸ்டிக்கர்/பெயர்ப் பலகை தயாரித்தல்	500 0	750 0	1,000 0
13	விளம்பர அறிவித்தல் பலகை மற்றும் ஏனைய அறிவித்தல்கள் என்பவைகளை வரையும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
14	அச்சகமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
15	செயற்கைப் பல் கட்டும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
16	பற் சிகிச்சை நிலையமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
17	அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி	500 0	750 0	1,000 0
18	கை இயந்திரங்கள் மூலம் இறப்பர் உற்பத்தி செய்யும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
19	குஷன் வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
20	தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனை	500 0	750 0	1,000 0
21	சுருட்டு மற்றும் பீடி உற்பத்தி அல்லது விற்பனை	500 0	750 0	1,000 0
22	அழகு சுந்தரிகள் அழகுபடுத்தும் இடமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
23	சலவை நிலையமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
24	கருங்கல் வேலை நிலையமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
25	வாகன நிறம் பூசுதல் மற்றும் பார ஊர்தி மேற்பாகங்களை அமைக்கும் இடங்கள்	500 0	750 0	1,000 0
26	செங்கற் சூளை ஒன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
27	விலங்குணவுகளை உற்பத்தி செய்யுமிடமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
28	விவசாய மருந்துகள் மற்றும் உர விற்பனை வியாபாரமொன்றை நடாத்துதல்	500 0	750 0	1,000 0

தொடர் இலக்கம்	கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை	I ஆம் நிரல்	II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி	
		ரூபா 750 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்	ரூபா 750 விட அதிகமாக இருந்தும் ரூபா 1,500 ஐ விஞ்சாத சந்தர்ப்பத்தில்	ரூபா 1,500 விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில்
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
29	சுண்ணாம்பு சார்ந்த உற்பத்திகளை செய்யுமிடமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
30	களஞ்சியசாலைப் பொருட்கள் மற்றும் அலுவலகப் பொருட்களை உற்பத்தி செய்தல்	500 0	750 0	1,000 0
31	தேயிலைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
32	இறப்பர் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
33	ஆடைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
34	தோற் பண்டங்களை உற்பத்தி செய்யுமிடமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0
35	தனியார் நீர் மின்வழு நிலையமொன்றினை நடாத்துதல்	500 0	750 0	1,000 0

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் விடயங்களிற்காக குறித்த உணவகம், சிற்றுண்டிச்சாலை அல்லது தங்குமிடங்கள் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அறவிடப்படுகின்ற கட்டணம் குறித்த கட்டணத்தினை அறவிடப்படுகின்ற வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வருமானத்திற்கேற்ப குறித்த வருமானத்தின் 1% கட்டணமாகும்.

12-575/4

குவன்வெல்ல பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2015

குவன்வெல்ல பிரதேச சபையினால் 2014, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 9-8-V இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
குவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குவன்வெல்ல,
2014, செத்தெம்பர் 25.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப-

(அ) குவன்வெல்ல பிரதேச சபை எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டில் செய்யப்படுகின்ற இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலிற்காகவும் குறித்த கைத்தொழிலை நடாத்துகின்ற வளவின் வருடாந்தப் பெறுமதி குறித்த அட்டவணையின் I ஆம் நிரலில் நேரான குறிப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ள அளவுகளிற்கு ஏற்றவாரான கைத்தொழில் வரியினை 2015, ஆண்டில் விதித்து அறவிடுவதற்கு ;

(ஆ) 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி காணப்பட்ட எவையேனும் கைத்தொழில் சம்பந்தமானது எனின் மேலே கூறப்பட்ட வரியினை 2015, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதிக்கு முன் கைத்தொழிலை நடாத்துகின்ற நபரினால் பிரதேச சபைக்கு செலுத்தல் வேண்டும் என்பதை கட்டளையிடுவதற்கு மற்றும்

